மானியம் போன்ற சலுகைகளும், தனியார்கள் தொடங்க முன்வந்தால் பெற்றுத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் விழுப்புரம் மாவட்டத்தில் கல்வராயன்மலை இருக்கிறது. சேலம் மாவட்டத்தை ஒட்டியிருக்கின்ற சின்ன கல்வராயன்மலை, பெரிய கல்வராயன்மலையில் கடுக்காய் அதிகமாக விளைகிறது. மருந்துக் குணம் படைத்த கடுக்காயை, மூலப் பொருளாகக் கொண்டு சாயம் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலையை உருவாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் *10-00*

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னபடி முதல்வர் அவர்கள் அறிவித்த குறு, சிறு, நடுத்தரத் தொழில் கொள்கையின்படி தமிழக அரசு எல்லா உதவிகளையும் தனியார்களுக்குச் செய்யும். 15 சதவீத முதலீட்டு மானியம், 36 மாதங்களுக்கு குறைந்த அழுத்த மின் மானியம் மற்றும் பல்வேறு சலுகைகளை, தனியார்கள் முன்வந்தால் இந்த அரசு செய்து தர தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திருமதி இளமதி சுப்பிரமணியன், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

15—

கிளை அச்சகம்

***62041—திருமதி இளமதி சுப்பிரமணியன்:**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2010 ஏப்ரல் 6]

வலங்கைமான் தொகுதியில் அரசு கிளை அச்சகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாவட்டங்களில் உள்ள அரசு அலுவலகங்களின் தேவையினைப் பூர்த்தி செய்திட, மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், புதுக்கோட்டை மற்றும் விருத்தாச்சலம் ஆகிய நகர்ப்புறங்களில் அரசு அச்சகங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, புதியதாக அரசு அச்சகம் வலங்கைமான் நகரில் தொடங்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி இளமதி சுப்பிரமணியன்.

திருமதி இளமதி சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலங்கைமான் தொகுதி, தஞ்சை மற்றும் திருவாரூர் தொகுதியை உள்ளடக்கிய தொகுதி ஆகும். மாவட்டத் தலைநகரங்களில் உள்ள கூட்டுறவு அச்சகத்தினை, கிளை அச்சகத்தினை வலங்கைமான் நகரம் மற்றும் அம்மாப்பேட்டை நகரங்களில் அமைத்தால் அங்குள்ள அரசு அலுவலகங்களுக்கும், பள்ளிகளுக்கும் தளவாடப் பொருட்கள் வாங்க எளிதாக இருக்கும் எனக் கூறி, இதை அரசு அமைத்துத் தருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலங்கைமான் நகரை உள்ளடக்கிய திருவாரூர் மாவட்ட அரசு கிளை அச்சகம் புதுக்கோட்டையில் உள்ளது. வலங்கைமானுக்கும், புதுக்கோட்டைக்கும் அதிக தூரம் இல்லை. எனவே தற்போது அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி இளமதி சுப்பிரமணியன்.

திருமதி இளமதி சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதி ஆண்டில் பரிசீலனை செய்து ஒதுக்கித் தரவேண்டும். 100 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அங்கு

சென்றுதான் இந்தத் தளவாடப் பொருட்கள் எல்லாம் purchase பண்ண வேண்டியிருக்கிறது. அதற்காக அரசு ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவை ஏற்படின் எதிர்காலத்தில் அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

16—

பாடத் திட்டம்

***56922—திருமதி ஜி. லதா:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் விவசாயம் சார்ந்த பாடத் திட்டத்தைக் கற்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேல்நிலைப் பள்ளிகளில் விவசாயப் பாடத் திட்டத்தினைத் தொடங்க பள்ளிகளில் போதுமான விளைநிலங்கள், நீர் வளம், மின் வசதி போன்ற வசதிகள் இருக்க வேண்டும். எனவே, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் விவசாயம் சார்ந்த பாடத் திட்டத்தைக் கற்பிக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.